# தாட்கோ மூலம் 382 மாணவர்களுக்கு ரூ.12.66 கோடி கல்விக் கடன்!

## அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் பதிலுரை ... 13ஆம் பக்கத் தொடர்ச்சி

மதிப்பீட்டில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல, மிக முக்கியமாக வாழ்வாதார மேம்பாடு.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் வாழ்வதாரத்தை உயர்த்தும் வகையில், பல்வேறு வாய்ப்புகளை வழங்கி, அதன் சார்ந்த பயிற்சிகளை அளித்து, அதற்கான பொருளாதார உதவிகளை மானியமாகவும், கடனாகவும் தந்து, சமுதாயத்தில் இச்சமூகங்கள் சமநிலை அடைய வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் முத்தமிழறிஞர்

கலைஞர் அவர்களால் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO) 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, மகத்தான முறையில் செயலாற்றி பொன்விழா கண்டுள்ளது. வாழ்வாதார உயர்வு, திறன் மேம்பாடு மற்றும் நீடித்த முன்னேற்றம் ஆகியவற்றினை உறுதி செய்யும் வகையில், முதலமைச்சரின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டம் CM Arise செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் மூலமாக கடந்த காலங்களில் திட்ட மதிப்பீட்டில் 30 சதவிகிதம் அல்லது அதிகபட்சமாக ரூபாய் 2.25 இலட்சம் இவற்றில் எது குறைவோ, அத்தொகை மானியமாக வழங்கப்பட்டது. ஆனால், நமது ஆட்சியில் திட்டத் தொகையில் 35 சதவிகிதம் அல்லது அதிகபட்சம் ரூபாய் 3.50 இலட்சம், இதில் எது குறைவோ, அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. அதுமட்டுமில்லாமல், 6 சதவிகிதம் வட்டி மானியமும் வழங்கப்படுகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் தாட்கோமூலம் கடன் பெறுவதற்கு, ஆண்டு வருமான உச்சவரம்பு ரூபாய் 2 இலட்சமாக இருந்தது. நமது திராவிட மாடல் ஆட்சியில் வருமான உச்சவரம்பு ரூபாய் 3 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோல, PM-AJAY திட்டத்தின்மூலம் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு, இந்த நான்காண்டுகளில், 31 ஆயிரத்து 774 பயனாளிகளுக்கு 308 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது.

கடந்த காலங்களில், தாட்கோமூலம் கடன் கோரி பெறப்படும் பெரும்பாலான விண்ணப்பங்கள் வங்கி மேலாளர்களால் பல்வேறு காரணங்களால் நிராகரிக்கப்பட்டு வந்த நிலையில், நமது திராவிட மாடல் ஆட்சியில் பயனாளிகள் வங்கிக் கடன் பெற எளிமையாக்கும் வகையில், ஓய்வுபெற்ற வங்கி மேலாளரை மண்டல அளவில் பணியமர்த்தப்பட்டு, ஆரம்ப நிலையிலேயே பயனாளிகளுக்கு ஆலோசனைகளை வழங்கி, விண்ணப்பங்களையும் கூர்ந்தாய்வு செய்து, அவரவர்களின் திட்டத்திற்கேற்ப, தேவையின் அடிப்படையில் மாற்றி அமைத்து, வங்கிக்கு பரிந்துரை செய்யப்பட்டு, வங்கிக் கடனும், மானியமும் பயனாளிகளுக்கு கால தாமதமின்றி நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் வழங்கப்படுகிறது.

தாட்கோவின் புதிய முயற்சியாக, நிறைய புதிய முயற்சிகளை முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். மிக முக்கியமாக, கோயம்பேடு வணிக சந்தையில் வியாபாரம் செய்யும் சிறு வணிகர்களுக்காக Micro Credit Finance வழங்கப்படுகிறது.

மகளிருக்கு சமூக அங்கீகாரம் கிடைக்கும் வகையில், மகளிருக்கான பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. அதில் மிக முக்கியமானது, நம்முடைய சமுதாயக் கோணங்களிளெல்லாம் அவர்களுக்கு பொறுப்புகளை வழங்கி, அதற்கு கடன்களும், மானியங்களும் வழங்கப்பட்டு, அதனை பராமரிக்கும் விதமாக புதிய திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**நன்னிலம் மகளிர்**
**நில உடைமைத் திட்டம்!**

கடந்த காலங்களில், ஆதி திராவிடர் மக்களுக்காக வழங்கப்பட்டிருக்கிற "நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டத்தில்" இருக்கிற ceiling-ஐ அதிகப்படுத்தி, அதற்கு அதிக தொகை ஒதுக்கீடு செய்து, அதையும் நாங்கள் செய்திருக்கிறோம்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் பள்ளி மாணாக்கருக்கு சீருடை தைத்தல், ஏகலைவா மாதிரி உண்டி, உறைவிட பள்ளி மாணாக்கருக்கு உணவு சமைத்தல், பொலிவு ஹெல்த் கேர் சொசைட்டி அல்லாமல் பல்வேறு மதிப்பு கூட்டப்பட்ட தொழில் திட்டங்கள் தொடர்பான பயிற்சிகளையும் நாங்கள் வழங்குகிறோம்.

கடந்த காலங்களில், துரித மின்னிணைப்பு திட்டத்திற்காக ஒரு நபருக்கு ரூபாய் 75 ஆயிரம் மட்டுமே மின்னிணைப்பு கட்டணமாக வழங்கப்பட்டது. நமது திராவிட மாடல் ஆட்சியில் மின் மோட்டார் குதிரைத் திறனுக்கு ஏற்ப அதிகப்படுத்தியுள்ளோம். அதாவது, ரூ.2.50 இலட்சம், ரூ.3 இலட்சம் மற்றும் ரூ.4 இலட்சமாக உயர்த்தப்பட்டதன் மூலமாக, கடந்த இரண்டாண்டுகளில் 2,100 விவசாயிகளுக்கு 49 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டு, மின்னிணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

மிக முக்கியமாக, மக்களுடன் முதல்வர் என்ற மகத்தான திட்டத்தின்மூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களிடம் இருந்து பெறப்படும் மனுக்களுக்கு தாட்கோவில் சிறப்பு முன்னுரிமை வழங்கப்பட்டு, கடந்த 2023-2024 ஆம் ஆண்டு ரூபாய் 10.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, இதன்மூலம் 851 பயனாளிகளுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கான தொழில்முனைவோர் சிறப்பு கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் (TN-BEAT EXPO) என்ற மாநாடு சிறப்பான முறையில் நடைபெற்று முடிவுற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பல்வேறு பயிற்சிகள் தாட்கோமூலம் வழங்கப்பட்டு, இதுவரை இல்லாத அளவிற்கு NEET, JEE, CLAT, UPSC, TNPSC போன்ற போட்டித் தேர்வுகள் மூலமாக நிறைய மாணவர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள்.

இதுமட்டுமல்லாமல், பழங்குடியின மாணவர்களுக்கு நிறைய வாய்ப்புகளைத் தந்து, மிக முக்கியமாக, ஐந்திணை என்ற தொல்குடி வேளாண்மை மேலாண்மைத் திட்டம் சிறப்பான முறையில் நடைபெற்று, பல்வேறு பழங்குடியின விவசாயிகள் பயன் பெற்றிருக்கிறார்கள்.

இதுமட்டுமல்லாமல், மிக முக்கியமாக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இயக்குநரகம் மற்றும் தாட்கோவில் உதவி பொறியாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் போன்ற காலிப் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன.

TRB மூலமாக, ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளிகளில் நீண்டகாலமாக காலியாக இருந்த 116 முதுகலை பட்டதாரி ஆசிரியர் காலிப் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வாணையம்மூலம் நிரப்பப்பட்டுள்ளன.

## முனைவர் பட்டப்படிப்பு கல்வி உதவித் தொகை ரூ.50 ஆயிரத்திலிருந்து ரூ.1 லட்சமாக உயர்வு!

சமூக மேம்பாட்டின்கீழ் மிக முக்கியமான சில முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம். மிக முக்கியமாக, தமிழ்நாடு மாநில ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையத்தை முதன்முறையாக நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் துவக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட இதுவரை 5,191 மனுக்கள் பெறப்பட்டு, 4,038 வழக்குகள் தீர்வு காணப்பட்டுள்ளன.

அதுமட்டுமில்லாமல் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்படி, நான் ஏற்கெனவே சென்னமாதிரி, தொடர்ந்து 4 ஆண்டுகளும் ஒவ்வொரு ஆண்டு இந்தக் கூட்டம் சிறப்பான வகையில் நடத்தப்பட்டிருக்கிறது. கடந்த கால ஆட்சியில் ஒரே ஒரு கூட்டம் மட்டும்தான் நடத்தப்பட்டிருந்தது. இதுமட்டுமில்லாமல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு கிட்டத்தட்ட 6,502 நபர்களுக்கு தீருதவி தொகை, கருணைத் தொகை மற்றும் ஓய்வூதியத்திற்காக ரூபாய் 71 கோடியே 45 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவிற்கென மாநில அளவில் காவல் துறைத் தலைவர், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் இது ஒரு புதிய முயற்சியாக, கூடுதல் காவல் துறைத் தலைவர் மற்றும் மாவட்ட அளவில் 38 காவல் துணை கண்காணிப்பாளர்கள் உள்ளடக்கிய தனிப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

அதுமட்டுமில்லாமல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட நல வாரியம், இது எல்லாவற்றையும் மறுசீரமைக்கப்பட்டு புதிய உறுப்பினர்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தேர்வு செய்துள்ளார்கள்.

அதேபோல இருளர் மக்களுக்கு, முக்கியமான ஜெயங்கொண்டம், உடையார்பாளையம் ஆகிய இடங்களில் வசிக்கும் இருளர் மக்களுக்கு இதுவரை இல்லாத வகையில் புதிய முயற்சியாக முந்திரி மகசூல் ஏல உரிமை வழங்கப்படுகிறது.

**பழங்குடியினர் பட்டியலில்**
**நரிக்குறவர் - குருவிக்காரர்கள் சேர்ப்பு!**

அதேபோல நரிக்குறவர், குருவிகாரர் வகுப்பினரை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முதல் முறையாக அந்தப் பெயரும் நம்முடைய திராவிட மாடல் ஆட்சியை சேரும்.

அதேபோல, நம்முடைய கலை மற்றும் கலாச்சாரம் எடுத்துக்கொண்டால் முதல் முறையாக பழங்குடினர் கலை, கலாச்சாரம் சார்ந்த நிகழ்ச்சிகள் "ஆதி கலைக்கோல்" என்ற நிகழ்ச்சியை முதல் முறையாக நடத்தியது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திராவிட மாடல் ஆட்சிதான். இதுபோல ஆள சிறந்த திட்டங்களை நமது துறை மூலமாக விளிம்பு நிலையில் உள்ள மக்களின் வளர்ச்சிக்காக அதிக கவனம் எடுத்து, செயல்படுத்தியுள்ளார் நமது முதலமைச்சர் அவர்கள்.

**அருந்ததியர் மக்களின் இல்லங்களில்**
**மதுரை வீரனாய் திகழ்கிறார் முதல்வர்!**

சாதிய பாகுபாடு, சமத்துவமின்மை போன்ற சாதிய கூர்முனைகளை வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் முறித்து, ஏற்றத்தாழ்வு சிந்தனைகளை களைத்து, சமத்துவ சிந்தனைகளை விதைத்தவர். வறுமை, அடிப்படை வசதியின்மை என்ற நிலையை மாற்றி, கல்வி, சமவாய்ப்பு, அடிப்படை வளர்ச்சி போன்றவற்றை பூர்த்தி செய்து, கிறுக்கல்களாக இருந்தவர்களின் வாழ்க்கையை, ஓவியமாக மாற்றிய ஒப்பற்ற தலைவர். எப்போதெல்லாம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சறுக்கல்கள் வருகிறதோ, அப்போதெல்லாம் எழுந்திருக்க உதவியவர், தற்போதுகூட அருந்ததியர்களுக்கு உள்இட ஒதுக்கீட்டில், சில சட்ட சிக்கல்கள் வந்தபோது, அருந்ததியர்களுக்கு அரணாக இருந்து, உச்ச நீதிமன்றம் வரை சென்று, உள்இட ஒதுக்கீட்டுக்கான அங்கீகாரத்தை மீண்டும் உறுதி செய்து, அம்மக்களின் உரிமையை காத்து, அருந்ததியர் மக்கள், தம் இல்லங்களில் தினந்தோறும் வணங்கக்கூடிய "மதுரைவீரனாக" திகழ்ந்து கொண்டு இருப்பவர் கழகத் தலைவர், திராவிட மாடல் நாயகர், நமது முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

We make a living by what we get, but we make a life by what we give நமக்கு என்ன கிடைக்குமோ, அதை வைத்து நம் வாழ்வை அமைத்துக்கொள்வோம், ஆனால், நாம் மற்றவர்களுக்கு என்ன கொடுக்கிறோமோ அதை பொறுத்துதான், அதை நம்பிதான் மற்றவர்களின் வாழ்க்கையே உண்டு. கொடுத்து, கொடுத்து, கொடுப்பதில் கொண்டாட்டம் அடையும் தலைவர் நம் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பெருமைமிக்க அமைச்சரவையில், இதுவரை இல்லாத வகையில், பட்டியலினத்தை சேர்ந்த நான்கு பேரை இடம் பெற செய்து, சுற்றுலாத் துறை, (மேசையைத் தட்டும் ஒலி) வனத் துறை, (மேசையைத் தட்டும் ஒலி) மனிதவள மேம்பாட்டுத் துறை, (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர் நலத் துறை முக்கியமாக உயர்கல்வித் துறையும் வழங்கி, விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கான சிறப்புமிக்க ஆதிதிராவிடர் நலத் துறையை நிர்வகிக்கும் வாய்ப்பை சாதாரண சாமானியனான இந்த மதிவேந்தனுக்கு வழங்கிய தமிழ் நாட்டின் வேந்தர் முதலமைச்சர் அவர்களுக்கு எனது பணிவான நன்றிகள் பல. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நான்கு ஆண்டுகளில் முதலமைச்சர் அவர்கள் அனைத்து துறைகளிலும் கவனம் செலுத்தி, அடித்தட்டு மக்கள், சிறுபான்மையினர், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள், பாட்டாளி மக்கள், தொழில் முனைவோர்கள் என அனைத்து மக்களுக்குமான பல்வேறு முன்மாதிரியான திட்டங்களை செயல்படுத்தி, இந்தியாவிலேயே, வளர்ச்சியில் முதல் மாநிலமாக தமிழ்நாட்டை முன்னேற்றி உள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய சிறப்புமிக்க நிர்வாகத் திறனின்கீழ், இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த மானியமானது, இறுதி மானியம் அல்ல, இனியும் தொடரக் கூடிய நமது திராவிடமாடல் ஆட்சியின் உறுதி மானியம். (மேசையைத் தட்டும் ஒலி)

**தளபதியின் தமிழ்நாடு!**

பல சிறப்புகளோடு, பல திறமைகளோடு, பல தனித்துவத்துடன், பல கலாச்சாரத்தை பின்பற்றி, பன்முகத் தன்மையோடு பலதரப்பட்ட மக்கள் ஒற்றுமையாக வாழக்கூடிய இந்த தமிழ் மண்ணில், எந்த ஒரு பிளவுபடுத்தக்கூடிய சக்திக்கும் இடம் இல்லை. ஏனென்றால், இது பெரியாரின் மண்; அண்ணாவின் பூமி; கலைஞரின் கோட்டை; தளபதியின் தமிழ்நாடு. தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும். (மேசையைத் தட்டும் ஒலி) அதை, திராவிட மாடல், வழி நடத்திச் செல்லும் இதை 2026-ல் திமுக கூட்டணியின் வெற்றி சொல்லும்! சொல்லும்! சொல்லும்! (மேசையைத் தட்டும் ஒலி)

**அறிவிப்புகள்!**

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை**

**1. "உறுதுணை"-குறு மற்றும் நுண் கடன் மானிய நிதி உதவித் திட்டம்**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில், தேசிய நிதி மேம்பாட்டுக் கழகங்களிலிருந்து குறைந்த வட்டியில் கடன் பெற்று, சிறு வணிகர்கள், வர்த்தகர்கள் மற்றும் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில், அரசு மானியத்துடன், மாவட்ட கூட்டுறவு வங்கிமூலம் ரூ.25.00 கோடி செலவில் "உறுதுணை"-குறு மற்றும் நுண் கடன் திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**2. TN-BEAT தொழில் வளர்ச்சி பயிற்சித் திட்டம்**

பொது கொள்முதல் செயல்பாட்டில் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர் அதிக ளவில் பங்கேற்பதை ஊக்குவிக்கும் நோக்கில், விற்பனையாளர் மேம்பாட்டுத் திட்டங்கள் (Vendor development programme), ஜெம் வலைதளம் (Gem Portal), பதிவு செய்தல், சந்தை வாய்ப்புகள், தமிழ்நாடு மின்னணு கொள்முதல் தளத்தில் பதிவு செய்தல், நிதி எழுத்தறிவு, ஒழுங்குமுறை இணக்கம் மற்றும் வணிக உத்திகள் குறித்த பயிற்சி ஐந்து மண்டலங்களில் 500 தொழில்முனைவோருக்கு ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**3. தாட்கோ புதிய வணிக வளாகத்திட்டம் (TAHDCO New Commercial Complex Scheme-TANCCS)**

உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள வணிக வளாகங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் செய்வதை உறுதி செய்யும் வகையில், தாட்கோ வணிக வளாகத் திட்டம் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்மூலம், உள்ளாட்சி அமைப்புகளின் விதிமுறைகளின்படி வணிக வளாகங்களில் தொழில் தொடங்க வணிகர்களுக்கு தாட்கோ உதவி செய்யும்.

**4. தொல்குடி ஐந்திணை பசுமைப் பண்ணை திட்டம்**

பழங்குடியினர் உழவர் கூட்டுறவு சங்கங்கள்மூலம் "ஐந்திணை-பசுமை பண்ணை திட்டம்" ரூ.14.00 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், பழங்குடியினரின் பாரம்பரிய விவசாய முறைகளுடன் நவீன அறிவியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, இயற்கைச் சூழல் மற்றும் விவசாய நிலத்தின் தன்மைக்கு ஏற்ற பயிர்கள் கண்டறியப்படும். மேலும், நவீன நீர்ப்பாசன முறைகள், மரபு சார்ந்த விதைகள் மற்றும் இயற்கை உரங்கள் போன்ற செயல்பாடுகள்மூலம் வேளாண்மை உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படும். இதன்மூலம் பாரம்பரிய விவசாய முறைகள் பாதுகாக்கப்படும்.

**5. ஈங்கூர் மற்றும் முதலிபாளையம் தொழிற்பேட்டைகளில் ஆயத்த தொழிற் கூடங்கள் (Plug and Play Industrial Park)**

திருப்பூர் மாவட்டம், முதலிபாளையம் மற்றும் ஈரோடு மாவட்டம், ஈங்கூரில் அமைந்துள்ள தாட்கோ தொழிற்பேட்டைகளில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்கள் நவீன தொழில்களை உடனடியாகத் தொடங்க ஏதுவாக, அனைத்து அடிப்படை வசதிகளுடன்கூடிய ஆயத்த தொழிற்கூடங்கள் ரூ.115.00 கோடி செலவில் அமைக்கப்படும்.

**6. நலிவடைந்த சமூகங்களை மேம்படுத்துதல்**

பொருளாதாரம், கல்வி மற்றும் வாழ்வாதாரத்தில் பின்தங்கியுள்ள சமூகத்தினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில், பாரம்பரிய கலை மற்றும் கைவினைத் தொழில் மேம்பாடு, மூலிகை மருத்துவம், பாதுகாப்பான பாம்பு விஷம் சேகரிப்பு போன்ற துறைகளை தற்காலத்திற்கேற்ப மேம்படுத்திட புதிய திட்டம் செயல்படுத்தப்படும். இந்த முயற்சி, நலிவடைந்தோரின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும்.

## விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு கற்றல் இனிதே – நல்லோசை கல்வி சார்ந்த பயிற்சி!

**7. சுவடுகள்-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் நுண்கலைகளை மின்னணு களஞ்சியம் (Digital Repository) மூலம் ஆவணப்படுத்துதல் மற்றும் காப்பகப்படுத்துதல்**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் தனித்துவமான நுண்கலை வடிவங்களான வெளிப்பாட்டு நடனம், இசை மரபுகள் மற்றும் இசைக் கருவிகளை எண்ம முறையில் ஆவணப்படுத்தி, வகைப்படுத்தி, தரவுத் தலைப்புகளுடன் சிறு குறிப்புகளாக தொகுத்து மின்னணு களஞ்சியமாக (Digital Repository) உருவாக்க ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இந்த முயற்சியின்மூலம் இந்த கலை வடிவங்களின் சுவடுகள் பாதுகாக்கப்படும்.

**8. கலைக் கொண்டாட்டம் மற்றும் களம் ஆடு**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களின் தனித்திறனை வளர்க்கும் நோக்கில் இலக்கியம், பேச்சு மற்றும் விளையாட்டுத் திறன்களை வெளிக்கொணரும் வகையில் போட்டிகள் நடத்த ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**9. ஆதி திராவிடர் - பழங்குடியினருக்கு கலைப் பயிற்சிப் பட்டறை!**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த இளம் கலைஞர்களின் கலை, இலக்கியம் மற்றும் நுண்கலைத் திறன்களை மெருகூட்டவும், நமது பாரம்பரிய கலை வடிவங்களின் சிறப்பை நிலை நிறுத்தவும் மூன்று நாள் பயிற்சிப் பட்டறை மற்றும் கருத்தரங்கு நடத்தப்படும். இந்த முயற்சியின் வாயிலாக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் தனித்துவமான பாரம்பரிய கலை, இலக்கியம் மற்றும் கலாச்சாரச் செல்வங்கள் பாதுகாக்கப்பட்டு, வருங்கால தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லப்படும்.

**10. தூய்மைப் பணியாளர்கள் நல்வாழ்வு திட்டம்**

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர்கள் பணியின்போது எதிர்கொள்ளும் சுகாதார இடர்களைக் குறைக்கும் வகையில், "விரிவான தூய்மைப் பணியாளர் நல்வாழ்வுத் திட்டம்" செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்மூலம் நடத்தப்படும் மருத்துவ முகாம்களில் பணியாளர்களுக்கு உடல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தேவைப்படும் பட்சத்தில் உயர்சிகிச்சைக்கான பரிந்துரைகளும், நோய்களைக் குணப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

**11. தொல்குடியினர் நல்வாழ்வுத் திட்டம்**

பழங்குடியின மக்களுக்கு தேவையான உயர்தர மருத்துவ சேவைகள் அவர்கள் வசிக்கும் இடங்களிலேயே கிடைப்பதை உறுதி செய்வதற்காக தொல்குடி நல்வாழ்வுத் திட்டம் ரூ.10.00 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இதில் பழங்குடியினரிடையே அதிகமாகக் காணப்படும் இரும்புச்சத்து குறைபாட்டினால் உருவாகும் சிக்கிள் செல் இரத்த சோகை (Sickle Cell Anaemia), தலசீமியா (Thalassemia) போன்ற நோய்களுக்குத் தேவையான அதிநவீன மருத்துவ வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் தொலைதூர மற்றும் எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினருக்கு அவசர மருத்துவத் தேவைகளின் போது விரைந்து உதவிட பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஆம்புலன்ஸ் வழங்குதல் போன்றவை அடங்கும்.

**12. தொல்குடி-பள்ளிகள் நவீனமயமாக்கல் மற்றும் தரம் உயர்த்துதல்**

பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மேம்பட்ட கல்வியையும், சமச்சீர் வசதிகளையும் அளிக்கும் வகையில், அறிவுத்திறன் வகுப்பறைகள், மின்நூலகங்கள், நவீன அறிவியல் ஆய்வகங்கள், போக்குவரத்து வசதிகள் மற்றும் திறன் பயிற்சி வகுப்பறைகள் உள்ளிட்ட நவீன வசதிகளுடன்கூடிய முன்மாதிரிப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும்.

**13. சமத்துவம் காண்போம்**

சமூக நீதியின் ஆணிவேரான சமத்துவத்தை நிலைநாட்ட, "சமத்துவம் காண்போம்" எனும் விழிப்புணர்வு பிரச்சாரம் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் முன்னெடுக்கப்படும். அனைவரும் சம உரிமைகளோடும், வாய்ப்புகளோடும் வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவது இப்பிரச்சாரத்தின் தலையாய நோக்கம்.

**14. வன்கொடுமை தடுப்புச் சட்டத்திற்கான சிறப்பு சட்டப் பயிற்சி**

வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் பதியப்படும் வழக்குகளை திறம்பட கையாள்வதற்காக நீதித் துறை, காவல் துறை மற்றும் ஆதி திராவிடர் நலத் துறை அதிகாரிகளுக்கு, இச்சட்டத்தின் பிரிவுகள் குறித்த விளக்கங்கள், நுணுக்கங்கள், சாட்சியங்களை மதிப்பிடும் முறை, தண்டனைகளை வழங்குவதற்கான வழிகாட்டுதல்கள் போன்றவற்றை ரூ.50.00 இலட்சம் செலவில் நீதித் துறை பயிற்சி யகம்மூலம் சட்டப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சி வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை திறம்பட செயல்படுத்தவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்யும்.

**15. சமத்துவ மயானம்**

இறப்பிலும் சமத்துவத்தை உறுதி செய்ய வேண்டும் என்ற சீரிய நோக்கத்தில் செயல்படுத்தபட்ட சமத்துவ மயான திட்டத்தை மேலும் வலுப்படுத்தும் விதமாக ரூ.8 கோடி மதிப்பீட்டில் எரிவாயு தகன மேடை, வாகனங்கள் மற்றும் பிரத்யேக மான செயலி வழங்கப்படும். இது இறுதிச் சடங்கிற்கான மரியாதையையும், கண்ணியத்தையும் ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் இறப்பிலும் சமத்துவத்தை உறுதி செய்கிறது.

**16. இதழியல் மற்றும் தொடர்பியல் துறை பட்டதாரிகளுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி**

இதழியல் மற்றும் தொடர்பியல் துறையில் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளின் வேலைவாய்ப்புத் திறன்களை மெருகூட்டும் வகையில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள இதழியல் மற்றும் ஊடகவியல் கல்வி நிலையத்தில் 50 பட்டதாரிகளுக்கு ஒரு வார கால உண்டு உறைவிட பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சியின் நிறைவில், முன்னணி ஊடக நிறுவனங்களில் இரண்டு மாதங்களுக்கு ஊக்கத்தொகையுடன்கூடிய நேரடி பயிற்சி வழங்கப்படும். இதற்கென ரூ35.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**17. கிராமப்புற மற்றும் நகர்ப்புற குடியிருப்புகளில் அயோத்திதாச பண்டிதர் திட்டத்தின்கீழ் அறிவுச் சுடர் மையங்கள்**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி, திறன் மேம்பாடு மற்றும் சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்ளும்பொருட்டு ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் 40 அறிவுச் சுடர் மையங்கள் கட்டப்படும்.

**18. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு நவீன விடுதிகள்**

நகர்ப்புறங்களில் உள்ள உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி பயின்று வரும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணாக்கரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அவர்களது விடுதி தேவையினை பூர்த்தி செய்யவும், அவர்களின் திறனை மேம்படுத்தவும் ரூ.80.00 கோடி மதிப்பீட்டில் உடற்பயிற்சி கூடம், பார்வையாளர் அறை, பன்னோக்கு அரங்கம் ஆகிய நவீன வசதிகளுடன்கூடிய முன் மாதிரி விடுதிகள் சென்னை, கோவை உள்ளிட்ட நகரங்களில் கட்டப்படும்.

**19. கல்லூரி விடுதிகளில் மின்னணு உட்கட்டமைப்பு வசதி**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களின் கல்வியறிவையும் தொழில்நுட்பத் திறன்களையும் மேம்படுத்தும் வகையில், ரூ.3.55 கோடி செலவில் அதிநவீன மின்னணு உட்கட்டமைப்பு உருவாக்கப்படும். இதன் முதற்கட்டமாக, அனைத்து விடுதிகளிலும் இணைய வசதியுடன் கூடிய தொலைக்காட்சிகள் நிறுவப்படும். இதன் வாயிலாக மாணவர்கள் கல்வி சார்ந்த காணொளிகளை சிரமமின்றி பார்க்கவும், இணையவழி கற்றல் மூலங்களை எளிதாக அணுகவும் முடியும்.

**20. ஆசிரியர் சிறப்புத் திறன் பயிற்சி**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றல் திறனை அதிகரிக்கவும், இனிமையான கற்கும் சூழலை உருவாக்கவும், முன்னணி உயர் கல்வி நிறுவனங்களில் சேர்க்கையினை அதிகரிக்கும் பொருட்டு ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் கடந்த நான்கு ஆண்டுகளில் 132 அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, அவற்றில் 100 அறிவிப்புகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள 32 அறிவிப்புகளுக்கான பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. அவை விரைவில் முடிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். வெட்டுத் தீர்மானங்கள்-இந்த மானியக் கோரிக்கையின்மீது 77 மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் 184 வெட்டுத் தீர்மானங்களை வழங்கியுள்ளார்கள். இவற்றில் பெரும்பாலான உறுப்பினர்கள் சமுதாயக் கூடம், பள்ளிக் கூடம், கூடுதல் பள்ளிக் கட்டடம், விடுதிகள் மற்றும் விடுதிகள் பராமரிப்பு, மயானம், மயான பாதை, அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள், சாலை வசதிகள் போன்ற வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளனர். இவற்றிற்கெல்லாம் என்னுடைய பதிலுரையில் விளக்கம் தந்துள்ளேன் என்று நம்புகிறேன். இவைகள்மீது தனி கவனம் செலுத்தி நிதிநிலைக்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மானியக் கோரிக்கைக்கு உறுதுணையாக இருந்த தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், நிதித் துறையின் முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும், மானியக் கோரிக்கை மற்றும் அறிவிப்புகளை சிறப்பான முறையில் தயாரிக்க பேருதவியாக இருந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை செயலாளர் திருமதி லட்சுமி பிரியா, அவர்களுக்கும், ஆதி திராவிடர் நலத் துறை ஆணையர் டி. ஆனந்த், அவர்களுக்கும், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு. கந்தசாமி, அவர்களுக்கும், பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் எஸ். அண்ணாதுரை அவர்களுக்கும், துறை சார்ந்த அனைத்து உயர் அலுவலர்களுக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, வெட்டுத் தீர்மானங்களை திரும்பப்பெற்று எனது மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் பதிலுரை வழங்கினார்.